
ரூ. 5.00

மக்கள் சிந்தனை

தமிழ் ஆண்டு 2039
ஆனி - சூன் 2008

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்



சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

விளம்பரக் கட்டணம்

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின் அட்டை			
வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	1/2 பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ. 5-00
ஆண்டுச் சந்தா	ரூ. 60-00
ஆயுட் சந்தா	ரூ. 600-00
புரவலர் கட்டணம்	ரூ. 1000-00

சந்தா - விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி,

மக்கள் சிந்தனை

குன்றக்குடி - 630 206

தொலைபேசி எண். 04577 - 264227

ஆதீன இணையதள முகவரி :
website : www.kundrakudiadheenam.org.

ஆசிரியர்

மரு. பரமகுரு

அச்சிட்டு வெளியிடுவோர் :
சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி.

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தமிழ்ஆண்டு 2039		மாதம்	: ஆனி
மலர் : 23		இதழ்	: 6

தொடரும் திருக்குறள் பயணம்

உலகத் திருக்குறள் பேரவை பொதுக்குழுக் கூட்டம் திருவள்ளுவராண்டு 2039 வைகாசித் திங்கள் 32 சனிக்கிழமை (14. 06. 2008) அன்று நமது குன்றக்குடித் திருமடத்தில் கூடியது. தமிழகம் எங்கும் இருந்நு இருநூற்றுக்கும் மேற்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நீண்ட தூரம் பயணம் செய்து மிகுந்த ஆர்வத்துடனும், எழுச்சியுடனும் கூடினார்கள். உடனடியாகப் பொதுக்குழு கூடியதால் வர இயலாத நிலையில் பொதுக்குழுவின் முடிவுகளை ஏற்றுக் கொள்வதாய் முந்நூறுக்கும் மேற்பட்ட ஒப்புதல் கடிதங்கள். உலகத்திருக்குறள் பேரவையின பொதுச்செயலாளர்கள் திருக்குறள் செம்மல் ந. மணிமொழியன், திருக்குறள் நா. சண்முகனார். தி. சு. மலையப்பன் ஆகியோர் முன்னிலை வகிக்க பொதுக்குழு கூடியது. உற்சாகமாய், எழுச்சியாய் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆலோசனைகளை வழங்கினார்கள்! நீண்ட நாட்களுக்குப் பின் கூடிய பொதுக்குழு! அடேயப்பா! ஒரு நாற்பதாண்டுகால இலக்கிய இயக்கம், சமூக சிந்தனை உடைய ஆர்வலர்கள், களப்பணியாளர்கள் திருக்குறளை உயர்த்திப் பிடித்து பள்ளிகளில், கல்லூரிகளில் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் மகத்தான மக்கள் இயக்கமாய்ப் பணியை இடைவிடாது ஆற்றிக்கொண்டு வருவதுதான் தனிச்சிறப்பு!

முதுமை, முத்திரை குத்தினாலும் சோர்வில்லாத இளம் உள்ளங்களாய்த் துள்ளிக்குதித்து ஆற்றும் களப்பணிகள்! புதிதாய் எழுச்சியாய், உணர்ச்சியாய், செயல்துடிப்பாய் தோன்றி இருக்கின்ற புதுக்கோட்டை மகளிர் அணி! மகளிர் அணியின் வேகத்தையும், விவேகத்தையும் பார்த்து ஈடுகொடுத்துச் செயல்பட வேண்டிய நிலையில் இளைஞர் அணி! திருக்குறள் நெறியில் தோய்ந்தும் பன்முகமாய்ப் பரந்துபட்ட அறிவும், நுண்மாண் நுழைபுலமும் உடைய உயர்மட்ட அறிஞர்குழுவின் வழிகாட்டுதல் என உலகத் திருக்குறள் பேரவையின் செயல்பாடுகள் சமூக மேம்பாட்டுக் களத்தில் பணியாற்ற வேண்டிய ஒரு இயக்கத்திற்கு உரிய எல்லாப் பரிணாமங்களோடும் பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

உலகத் திருக்குறள் பேரவையின் பொதுக்குழுவின், உணர்ச்சியும், அறிவும் சார்ந்த விவாதங்களுக்குப் பிறகு, அரிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன! தமிழுக்கும், தமிழனுக்கும் வரலாறு உண்டு! தமிழன் தன் வரலாற்றை தமிழ் ஆண்டின் வரலாறாய் பதிவு செய்வதற்கு ஏற்ற வண்ணம் திருவள்ளுவப் பெருமானை காலத்தின்மையாய் வைத்து, தமிழ் ஆண்டுப்பிறப்பினை அறிவித்திட்ட தமிழக அரசுக்கும், முத்தமிழறிஞர், முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

ஆன்மீகத் தளத்தில் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அரிய திட்டத்தினைச் செயல்படுத்தியதற்கும், தில்லையில் சிற்றம்பல மேடையில் ஏற முடியாமல் தவித்த திருமுறைகளைச் சிற்றம்பல மேடையில் ஓத அனுமதித்ததற்கும் இதற்காக தம் வாழ்நாள் எல்லாம் போராடி வறுமையில் வாடிய ஆறுமுகசாமி சிவனடியார்க்கு மாதம் தோறும் ரூ. 3000/- அரசு நிதி உதவி வழங்கியதற்கும் நன்றி தெரிவித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன! இப்பணிகளில் இந்து சமய அறநிலையத்துறை, தமிழ் வளர்ச்சித் துறையின் பங்களிப்புகள் பாராட்டுக்குரியவை!

உலகத் திருக்குறள் பேரவையின் வளர்ச்சியின் திசைநோக்கி பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்டம் தோறும், கிராமந்தோறும், கிளை அமைப்புகள் உருவாக வேண்டியதன் அவசியமும் அதிகமாக இளைஞர்களைத் திருக்குறள் நெறியின்பால் ஈர்க்க வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டன. இந்தியத் தலைநகராகிய டெல்லி மாநகரத்தில் டெல்லி தமிழ்ச்சங்க வளாகத்தில் திருவள்ளுவர் திருவுருவச்சிலை அமைய இருப்பதை வரவேற்றும், கருநாடகத்தில் பெங்களூரில் திறக்கப்படாமல் இருக்கும் திருவள்ளுவர் திருவுருவச்சிலை திறக்கப்பட மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன! உலகத் திருக்குறள் பேரவையில் மாநில மாநாடு திருக்குறள் பேரவையின் புரவலர்களுள் ஒருவராகிய தவத்திரு பாலமுருகன் அடிமை சுவாமிகளின் வேண்டுகோளுக்கு இனங்க இரத்தினகிரியில் நடத்துவது என முடிவு எடுக்கப்பட்டது.

வள்ளுவப் பெருந்தகையின் வாக்கின் வழியே நம் நெஞ்சில் நிறைந்திருக்கும் மகாசன்னிதானத்தின் கனவுகளை நனவாக்கும் திசையில் உலகத் திருக்குறள் பேரவை விரைந்து நடைபோடுவதை உணர முடிகின்றது.

திருமுறைகளே நமது மறைகள்!
திருக்குறளே நமது பொதுமறை!

என முழங்கிய மகாசன்னிதானம் காட்டிய திசையில் திருக்குறள் பயணம் தொடரட்டும்!

வாழ்க திருவள்ளுவர் புகழ்!
வெல்க திருக்குறள் வழிப் பயணம்!

வாழிய பல்லாண்டு



(தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்)

ஒருநாள் காலை குடையிடம் கேட்டேன்!
"நீ விரும்புவது மழையில் நனைவதையா?
வெயிலில் காய்வதையா?"
குடை புன்னகைத்தது; பின் சொன்னது!
"என்கவலை இதைப்பற்றி அல்ல!"
நான்மீண்டும் கேட்டேன்
"பின் எதைப்பற்றியது உன்கவலை?"
குடை சொன்னது.
"என் கவலை எல்லாம்
எப்படிப்பட்ட பேய்மழை, ஆனாலும்
என்மக்களை நனையவிடக் கூடாது
எப்படிப்பட்ட வெயிலானாலும்
என்மக்களைக் காயவிடக் கூடாது"

– சீனக்கவிதை

இந்தக் கவிதைவரிகள் பிடித்திருக்கும்
குடையின் உணர்வுகளை
நாளும் நாளும் சுமந்து
மக்கள் பணியாற்றுபவர்.
தன் ஆட்சிக் குடையை ஏந்திப் பிடிக்கும் பொழுதெல்லாம்
அடித்தளத்து ஏழைஎளிய ஒடுக்கப்பட்ட
அடக்கப்பட்ட பாட்டாளிவர்க்கம்
வறுமையின் வெம்மையில் வாடிவிடாமல்
நிழல்பரப்பும் நிரந்தரத் தலைவர்!
உப்புக்கடலில் மூழ்கியிருக்கும் முத்து!
தாம் கண்ணீர்க் கடலில் மூழ்கிய போதும்
ஏழைகளின் கண்ணீர் துடைக்கும்
கருணையின் முத்து!

9

மானுட நேயத்தின் சொத்து!
பூமிக்கு அடியில் அழுத்த வெப்பத்தால்
கரி வைரமாய் மாறும்!
இரசாயன மாற்றம் நிகழும்!
பூமிக்கு மேலே ஓயாத உழைப்பு வெப்பத்தால்
தன்னைத்தானே செதுக்கிக் கொண்ட
ஒப்பற்ற மனித வைரம்!
சோர்வில்லாது விழிகள்
ஓயாது விழித்துக் கொண்டிருக்கும்!
உழைத்துக் கொண்டும் இருப்பது
அறியாமையில் உறங்கிக் கிடக்கும்
உழைக்கும் மக்களின்
வாழ்க்கை விடியலுக்கே!
15-ல் தொடங்கிய பொதுவாழ்வின்
புரட்சி பூபாளம்!
85-லும் எழுந்து உயர்ந்து நிற்கும்
உணர்ச்சியின் சங்கநாதம்!
தமிழும் தமிழரும் வாழ,
வாழிய பல்லாண்டு! வாழிய பல்லாண்டு!

பிறர் நலம் பேணுகின்ற சான்றோர் பெருமக்கள் சூழ வாழ்பவனே வாழ்பவன். அந்த அன்பு வாழ்க்கையே ஊர் தோறும் வேண்டும். அத்தகு அன்புதான் வீட்டுக்கும் வீட்டுக்கும் இடையே உள்ள சுவர்களை இடிக்கும்; வீதிக்கும் வீதிக்கும் இடையே உள்ள திரைகளை விலக்கும். நாட்டோடு நாட்டை இணைக்கும்; உலகை ஒரு குடும்பமாக்கும். இதைத்தான் வாழும் மனிதத்தின் உயிர்நிலையாகச் சொல்கின்றார் திருவள்ளுவர். அத்தகு அன்பைப் போற்றி வளர்ப்போம். அன்பு எனும் நல்விதையை எங்கும் விதைத்திடுவோம்.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" (திருக்குறள் 80)

- பொன்னம்பல அடிகளார்

அச்சுப்புதிப்பு திருபட்டுள்ளது.

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு. (874)

பகையை நட்பாகக் கொண்டொழுகும் பண்புடைய அரசனின் பெருமைக்குள் இந்த உலகம் அடங்கும்.

ஒரோவழி சந்தர்ப்ப வசத்தால் யாருடனாவது பகை வந்துற்றால் அப்பகையை வளர்த்துக்கொள்ளாமல் நட்புச் செய்து கொண்டு ஒழுகுதல் வேண்டும்எ ன்று உணர்த்தியது.

தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று. (875)

ஒருவன தனக்குத் துணை இல்லாத நிலையில் பகைவர் இருவராயின், பகைவர் இருவருக்குள் பொருந்தி வரக்கூடிய ஒருவரைப் பகைவரிடமிருந்து பிரித்து இனிய துணையாகக் கொள்க.

தமது வலிமை இல்லாமல் வீம்புச் சண்டை போடுதல் கூடாது என்பது கருத்து.

பகைவர் பலவீனமடைவதும் வெற்றிக்குச் சமம் என்றுணர்க.

தேறினும தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல். (876)

பகைவனை ஆய்ந்தறிந்து தெளிந்தாலும் தெளியாவிட்டாலும் அழிவு வரும்பொழுது பகைவனை நட்பாகக் கொள்ளாமலும் அதேபோழ்து ஒதுக்காமலும் விடுக. இதுவே, நடுநிலைக் கொள்கை என்று கூறப்பெறும்.

அழிவு வரும்பொழுது பகைவனைப் பற்றிய முடிவுகள் எடுத்து உறவு கொள்ளல் அல்லது ஒதுக்குதல் ஆகியன அழிவை உறுதிப்படுத்தும். தவிர்த்திடுக.

நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவர் அகத்து (877)

நொந்து கொள்ளுதல் வேண்டாம். தமது நொந்த நிலையை அறியாதாருக்குக் கூறவேண்டாம். தமது வலிமையின்மையைப் பகைவரிடத்துக் கூறுதல் வேண்டாம்.

நோதலால் பயனில்லையாதலால், "நோவற்க" என்றார்.

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு (878)

தன் மேம்பாட்டுக்குரிய வகையறிந்து தன்னை வளர்த்துக்கொண்டு தற்காத்துகொள்ளும்பொழுது பகைவரின் செருக்கழியும். பகைவரின் செருக்கை அடக்கும் முயற்சியைவிடத் தன்னை வளர்த்துக்கொளளும் முயற்சியே சிறந்தது என்றார்.

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து. (879)

களைய வேண்டிய முள் மரத்தை இளமையாயிருக்கும் பொழுதே களைக. அங்ஙனம் இளமையிலேயே களையத்தவறி முற்றிய நிலையில் அகற்ற முற்படின் கைகளைக் காயப்படுத்தும்.

உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார் (880)

தம்முடைய பகைவரின் ஆற்றலைச் சிதைக்கும் ஆற்றலிருந்தும் அஞ்சிச் சிதைக்காது இருப்பவர் மூச்சு விடுவதனாலேயே மனிதர், உயிர் வாழ்வோராகக் கருதப்பெறமாட்டார்.

(தொடரும்)

பலர் பசித்திருக்க, பார்த்திருக்கத் தான் உண்பதும், பலர் வாடத் தான் வளம் சேர்ப்பதும் அழுக்காற்றினை உருவாக்குகின்ற கருப்பைகள்! எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கின்ற சமநிலை - சமவாய்ப்புச் சமுதாயத்தில் அழுக்காறு அடையாளம் தெரியாமல் அழிந்துபோகும்! காகத்தைப் போல் கூடி வாழ்கின்ற - கூடி உண்கின்ற சமுதாயத்தில் அழுக்காறு என்பது அறியாத பொருளாக இருக்கும். உலகம் உண்ண உண்கின்ற, உலகம் உடுத்த உடுத்துகின்ற சமூக உணர்வை நோக்கி, உலகத்தை இயக்கும் பொழுதுதான், அழுக்காறு தற்கொலை செய்துகொள்ளும். தாம் தீய பழக்கங்கள் இல்லாதவராக இருப்பது மட்டுமல்ல ஒழுக்கம். உலகத்தோடு ஒட்ட ஒழுகும் பண்பாளராக இருப்பதுதான் ஒழுக்கம்.

- பொன்னம்பல அடிகளார்

நான் கண்ட அடிகளார்

(அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் 84-ஆம் திருவவதார நாள் (ஆனி 11 - 25.6.2008) நினைவுக் கட்டுரை)

(குடந்தை கதிர். தமிழ்வாணன்)

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு" - (தமிழ்மறை)

தி.பி. 1981! ஆம். கி.பி. 1950இல் குத்தாலம் (அன்றைய) கழக உயர்நிலைப்பள்ளியில் நான் இரண்டாம் படிவம் (7ஆம் வகுப்பு) பயின்று கொண்டிருந்த மாணாக்கன். பள்ளி இலக்கிய மன்ற ஆட்டை விழா; பிற்பகல் 3.00 மணிக்குத் தொடங்குகிறது. விழா நிகழ்ச்சி நிரலின் படி, "சிறப்புரை" என விழாத் தலைவர் விளித்தவுடன், முத்தமிழ் மாமுனி - அகத்தியரைப் போன்ற - அருள் வடிவமொன்று மேடையில் எழுந்து நிற்கிறது.

உருண்டு திரண்ட உடல்; அவ்வுடலில் மிளிரும் துவராடை; வேணிகள் முடித்துக் கட்டிய காவியுடை; கறுத்து, அடர்ந்த தாடி; நீறுபூத்த நெற்றி; குனித்தபுருவம், கொவ்வைச் செவ்வாய்; குமிண் சிரிப்பு; கட்டான இளமை; கணீர் என்ற வெண்கலக் குரல்; கோடை இடியைப் போலக் கொட்டிக் கொப்பளித்து வரும் - அரிமாமுழக்கம்; சிரித்து மகிழ்தற்கு மட்டுமின்றிச் சிந்தித்துத் தெளிதற்குமுரிய செந்தமிழ் நடைபயிலும் சீரிய கருத்துகள் செறிந்த உரை; இத்தனையும் இன்னபிறவும் ஒத்து-உயர்ந்து-ஒருங்கிணைந்த ஓர் ஒப்பற்ற திருவுருவே - என் வாழ்வில் முதன்முதலில் நான் கண்ட அடிகளார்! ஆம் அவர்தாம் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்"

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்"

என்னும் 215, 216, 217 ஆகிய மூன்று குறட்பாக்களின் சாரமே, அடிகளாரின் அன்றைய பேச்சின் கருப்பொருள்.

அற்றைப் பொழிவில் அவர் வழங்கிய சொல்வளம்! அவர் கூறிய செந்தமிழ்ப் பொருள் வளம் கேட்டாரைப் பிணிக்கும் தகைமை! கேளாரும் வேட்ப மொழியும் சொல்வன்மை - ஆகியவை அவையோர் அனைவரையும் கவர்ந்தது. பதின்மூன்றகவைச் சிறுவனாக இருந்த யான், அன்றே அடிகளாரின் ஆழ்ந்தகன்ற அறிவு நெறிச் சிந்தனையில் என் நெஞ்சத்தைப் பதித்துப் பறிகொடுத்து அடிமையானேன்.

ஆம்! அன்று முதல் மைல் கணக்கில் நடந்தும் – மணிக்கணக்கில் காத்திருந்தும், அடிகளாரின் எழுச்சி மிக்க – புரட்சிக் கருத்துக்களைக் கேட்கும் இயல்பினனானேன். அடிகளாரின் தமிழர் சமயம் தழுவிய, தண்டமிழ் நெறிகளைப் பின்பற்றும் ஓர் உண்மையான தொண்டனாக என்னை உருவாக்கிக் கொண்டேன்.

தி.பி. 1993 இல் (கி.பி. 1962) குடந்தையில் தவத்திரு அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற தமிழ் வழிபாட்டுத் தொடக்க விழாக் கூட்டத்திற்குச் சென்றேன். கூட்ட முடிவில், அடிகளாரின் கையெழுத்தினைப் பெற பலரும் வரிசையாக நின்றனர்; அவ்வரிசையில் நானும் ஒருவனாக நின்றேன்; ஏதோ ஓர் அமைப்பிற்கு நன்கொடை வழங்க 25 காசுகள் மேனி; தம்மிடம் கையெழுத்துப் பெறுவோரிடம் பெற்றுக் கொண்டிருந்ததாக நினைவு... என்னிடமோ அப்போது காசு இல்லை. எனவே, யான் வரிசையின் கடைசியில் சென்றேன்; காசில்லை என்றேன்.

பக்கத்தில் நின்ற என்னைப் பார்த்து, "நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்று அடிகளார் வினவினார்கள். "குடந்தை நகராட்சிப் பள்ளியில் ஆசிரியனாகப் பணியாற்றுகின்றேன்" என்றேன் நான். "திருவாசகம் தெரியுமா?" என்றார்கள். "தெரியும்" என்றேன், "எங்கே ஒரு பாடலைச் சொல்லுங்கள்?" என்றார்கள். அடிக்கடி அடிகளார் வாயிலாகவே நான் கேட்டு. இன்புற்ற "பானினைந் தூட்டும்" என்னும் திருவாசகப் பாடலைப் பாடினேன்.

"ஒரு திருக்குறள் சொல்லுங்கள்" என்றார்கள்.

"அறிவு அற்றம் காக்கும்கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்"

என்னும் குறளைக் கூறினேன். இவற்றைக் கேட்டு மகிழ்ந்து, எனக்குக் கையொப்பம் வழங்கியதுடன், திருமுறை அர்ச்சனைக் கொத்து என்னும், திருமுறைத் தொகுப்பு நூலொன்றையும் பரிசாகக் கொடுத்துப் பாராட்டினார்கள். அன்றுதான் அடிகளாரிடம் நேரில் பேசும் வாய்ப்பு எனக்கு முதன் முறையாக ஏற்பட்டது.

மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் செந்தமிழ் நெறியில் நின்று, என் உயிரினும் மேலாக மதித்துப் போற்றிப் பேணி வருகின்ற தனித்தமிழ் இயக்கமாகிய உலகத்தமிழ்க் கழகத்தின் இரண்டாம் மாநில மாநாடு, தி.பி. 2002 (கி.பி. 1971) இல், கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடமர்ந்து, பண்ணுறத் தெரிந்தாய்ந்து, பசுந்தமிழ் வளர்த்த முக்கூடற் பெருநகராகிய - மதுரையில் நடைபெற்றபோது, செந்தமிழ் நெறியின் பாற்பட்ட - என்னுடைய தூய சமையமொழி உணர்வுகளை அடிகளாரிடம் யான் தெரிவித்து விளக்கவும், அவர்கள் என்னைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பாக அமைந்தது.

தொடர்ந்து, அருள்நெறித் திருக்கூட்டம், தெய்வீகப் பேரவை - திருக்குறள் பேரவை - திருவருட்பேரவை - தமிழர் சமயப் பேரவை போன்ற அடிகளாரின் தலைமையின் கீழ் இயங்கிய - இயங்குகின்ற பல்வேறு அமைப்புகளில் யான் கொண்ட தொடர்பும், ஏற்ற பொறுப்பும், அணிலைப் போல் ஆற்றிய சிறிய பணிகளும், ஏனைய ஒழுகலாறுகளும், அவர்களுடைய மேலான, தூய உள்ளத்தில் எளியேனையும் இடம்பெறச் செய்தன. "கதிர். தமிழ்வாணன் அப்பரடிகளைப் போன்ற தொண்டு நெறிவயப்பட்டவர்" என்று ஒருமுறை அடிகளார் திருவாய் மலர்ந்தருளினார்கள். இதனை, இப்பிறவியில் யான் பெற்றப் பெரும் பேறாகக் கருதி, மகிழ்கின்றேன்!

அடிகளார், சமய வழிப்பட்ட - சமுதாயப் பார்வையாளர்; "சமயம் - சமுதாயத்திற்கே" என முழங்கும் மக்கள் சிந்தனையாளர்; பொதுமையிலும் - புதுமைகாணும் புரட்சி நோக்காளர். அவர், "உள்ளத்தால் பொய்யாது ஒழுகுதலினால், உலகத்தார்

உள்ளத்துளெல்லாம் நிறைந்து நிற்கின்றார்". இவர் ஒரு மதத்தலைவர் மட்டுமல்லர்; மக்கள் தலைவர். பொதுவாகத் தலைவர்கள் எனப்படுவோர், வழிகாட்டிய தலைவர் – வாழ்ந்து காட்டிய தலைவர் என இரு வகைப்படுவர்.

வழிகாட்டுகின்றவர்களோ, மேடை கிடைத்தால் முழங்குவர்; ஏடு கிடைத்தால் எழுதுவர். அத்தகையோரில் மிகப் பெரும்பான்மையோரின் நடைமுறை வாழ்க்கையில் சொல்லுக்கும் செயலுக்கும், உறவையும் – உரிமையையும் காண்பது முயற்கொம்பே யாம், ஆனால், வாழ்ந்து காட்டுகின்ற தலைவர்களோ, மற்றவர்கட்குப் பேசியும், எழுதியும் காட்டுவதோடு நில்லாது, அவற்றைத் தாமே, தமது வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகி, வாழ்ந்து காட்டுவர். ஆகவே, வழிகாட்டுகின்றவர்களைவிட வாழ்ந்து காட்டுகின்றவர்களே மக்களின் உண்மையான நம்பிக்கைக்கும், போற்றுதலுக்கும், மதிப்பிற்கும் – ஏன்? வழிபாட்டிற்கும் கூட உரியவராவர். அந்த வகையில்,

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

அருளின் வடிவம்

ஆற்றலின் தோற்றம்

இலக்கியத் தலைவர்

ஈகத்தின் திருவுரு

உறுதியின் இருப்பிடம்

ஊக்கத்தின் பிறப்பிடம்

எளிமையின் இலக்கணம்

ஏழையர் தோழர்

ஐந்தொகைக் கணக்கர்

ஒருமைப்பாட்டு உணர்வாளர்

ஓயாத உழைப்பாளர்

ஔவியம் பேசா அறநெறியாளர்

பண்பின் நிலைக்களன்; பகுத்தறிவுச் செம்மல்; புதுமை நோக்காளர்; புரட்சிப் போக்காளர்; சமநிலைச் சிற்பி; சமயப் பொதுவர்; சிந்தனைச் செல்வர்; சொல்லேருழவர்; பொதுமைப் பூங்கா; பட்டிமன்ற மாமணி!

தமிழகத்துத் தனிப் பெருந்தலைவர்களாகிய பெருந்தலைவர் காமராசர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், தமிழ்த் தாயின் தலைமகன் பேரறிஞர் அண்ணா, தனித்தமிழ் வேழம் மொழிஞாயிறு பாவாணர் போன்ற பல்துறை அறிஞர் பெருமக்களின் நெஞ்சங்களில், பசுமையாக எஞ்ஞான்றும் நீங்காது நிலைத்து நின்ற அருட்சுடர்! சொல்லைக் குறைத்து செயலைப் பெருக்கிக் காட்டுவதையே நடைமுறைப்படுத்தி வரும் செயலரிமா! "கூட்டுறவே நாட்டுயர்வு!" என்பதை, வெற்று முழக்கமாக மட்டும் கொள்ளாமல், "கூட்டுறவு வளர்ச்சியில் – குன்றக்குடி, இந்தியாவிலேயே ஓர் எடுத்துக்காட்டான ஊர்" என்று மறைந்த இந்தியத் தலைமையமைச்சர், திருவாட்டி இந்திராகாந்தி அவர்கள் பாராட்டிப் புகழ்ந்து கூறும் அளவிற்குக் குன்றக்குடியைக் கூட்டுறவு முறையில் தொழில்மயமாக்கி, அப்பகுதிவாழ் ஏழை – எளிய மக்களின் இல்லாமையை, இல்லாமையாக்கிய ஏந்தல்!

தலைமுறை தலைமுறையாகத் தமிழகத்துத் திருமடங்களின் தலைவர்கள், ஆரியப் பாங்கினை அடியொற்றி, "சிரீ–ல–சிரீ" களாகவும், "எசமான் சுவாமி" களாகவும்" "குருமக(ா)ா சந்நிதானம்"களாகவும் தம்மை அறிமுகப்படுத்தி" தமிழ் நெறியைப் புறக்கணித்துவருகின்ற நிலையில் இவர்கள் ஒருவர் மட்டுமே, அவ்வழி மரபை உடைத்தெறிந்துத் தம்மை "அடிகளார்" என அருந்தமிழில் அறிமுகப்படுத்தி தமிழ் மானத்தையும் – தமிழர் மானத்தையும் காப்பாற்றியுள்ளார்கள்.

அடிகளார் போற்றிய இச்சீரிய நெறிகளை நாமும் பின்பற்றி, நாடும் – மொழியும் – நற்றமிழினமும் வாழ வளர வகை செய்வோமாக!

உழைப்புக்கேற்ற தேர்ச்சி

10- ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகளில் அனைத்து வருவாய் மாவட்டங்களின் தேர்ச்சி விகிதங்களைப் பரர்க்கும்போது பள்ளிகள் தன்னிச்சையாக "தரம்" பிரிவதைக் காணமுடிகிறது.

பொதுவாக, வருவாய் மாவட்டங்கள் அனைத்திலும் அரசுப் பள்ளிகளின் தேர்ச்சி விகிதம் சராசரியாக 70 சதவீதத்துக்கு மேலாகவும், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளின் தேர்ச்சி விகிதம் 80 சதவீதத்துக்கு அதிகமாகவும், அரசு நிதியுதவி பெறாத தனியார் பள்ளிகள் மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் தேர்ச்சி விகிதம் 90 சதவீதத்துக்கு அதிகமாகவும் இருக்கிறது.

தமிழ்நாட்டில் 2,126 அரசு உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. அரசு உதவி பெறும் பள்ளிகள் 613. இதில் படிக்கும் மாணவர்கள் (9ஆம் வகுப்பு, 10ஆம் வகுப்பு இரண்டிலும்) 12 லட்சம் பேர். 2006 - 07ஆம் ஆண்டு கல்வித் துறை புள்ளிவிவரப்படி இவர்களுக்காக 32,985 ஆசிரியர்கள் பணியில் உள்ளனர். நிகழாண்டில் பத்தாயிரத்துக்கும் அதிகமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசு நிதியுதவி பெறாத 179 தனியார் பள்ளிகள் மற்றும் 2,053 மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் 6.60 லட்சம் மாணவர்கள் படிக்கின்றனர். இப்பள்ளிகளின் ஆசிரியர்களின் எண்ணிக்கை 42,034.

ஏறக்குறைய ஒரே அளவு எண்ணிக்கை ஆசிரியர்களைக் கொண்டு இயங்கும் இருவகை பள்ளிகளுக்கும் இடையில் 20 சதவீதத் தேர்ச்சி இடைவெளி விழுகிறது என்றால் இதற்கான காரணம் என்ன?

ஆசிரியர் கூட்டணிகள் ஆசிரியர் சங்கங்கள் சில காரணங்களைச் சொல்கின்றன. "எங்களுக்கு போதிய வசதிகள் இல்லை. கிராமப்புற மாணவர்கள்தான் எங்கள் பள்ளியில் படிக்கிறார்கள். தனியார் பள்ளிகள் புத்திசாலி மாணவர்களை மட்டுமே சேர்த்துக்கொள்கிறார்கள்..." என்று இவர்கள் சொல்லும் காரணங்கள் உண்மையே, ஆனாலும் இவர்கள் வேறு சில சுய ஆய்வுகளை செய்து பார்க்க வேண்டும்.

இன்றைய மெட்ரிகுலேஷன் பள்ளிகள் கடந்த 15 ஆண்டுகளில் பெருகியவை. இன்று தங்கள் பிள்ளைகளை மெட்ரிகுலேஷன் பள்ளிகளைத் தேடிப்போய் சேர்க்கும் பெற்றோரில் 90 சதவீதம் பேர், 15 ஆண்டுகளுக்கு முன்பு கிராமப்புற, புறநகர்ப் பள்ளிகளில் படித்து முன்னேறியவர்கள்தான். ஆனால் இன்றைய நாளில் அவர்கள் ஏன் தங்கள் பிள்ளைகளை அரசுப் பள்ளியில் சேர்க்கத் தயங்குகிறார்கள்? அவர்கள் அந்தஸ்து கூடிவிட்டது. அதிக சம்பளம் வாங்குகிறார்கள் என்பது மட்டும்தான் காரணமா?.... இல்லை.

மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் மாணவர்கள் ஆங்கிலத்தில் கல்வி பயில்கிறார்கள் என்பதைத் தவிர, அவர்கள் எந்த வகையிலும் தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவர்களைவிட அதிபுத்திசாலிகள் இல்லை. ஆங்கில வழிக் கல்வியில் அறிவுச்சுடர் திடீரென தானே தீப்பந்தமாக எரியாது என்பது தெரியும். இருப்பினும் ஏன் அங்கே போய் பணத்தைக் கொட்டிச் சேர்க்கின்றனர்.

தனியார் பள்ளி மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் ஆசிரியர்கள் வகுப்பு நடத்துவது கண்காணிக்கப்படுகிறது. பொதுத் தேர்வு முடிந்தவுடன், தங்கள் பள்ளி மாணவர்கள் சராசரியாக எந்தப்பாடத்தில் அதிக மதிப்பெண் பெற்றார்கள், அல்லது மதிப்பெண் குறைந்துள்ளது என்பதை கணக்கிடுகிறார்கள். இந்த நிலை மற்ற பள்ளிகளிலும் நிலவுகிறதா? கடினமான கேள்வித்தாள் காரணமா? அல்லது கற்பித்தலில் குறைபாடா? என்பதை ஆய்வு செய்கிறார்கள். ஆசிரியரின் கற்பித்தல் குறைபாடு காரணம் என்று தெரியவந்தால், உடனடியாக வேறு ஆசிரியரை நியமிக்கிறார்கள். அதிக மதிப்பெண்ணுக்கு காரணம் ஆசிரியர்தான் என்று தெரிந்தால், கூடுதல் சம்பளம் கொடுத்து தக்க வைத்துக் கொள்கிறார்கள்.

இவை அனைத்தையும் நிர்வாகம் கல்வித் தாகத்தால் செய்யவில்லை என்பதும், கல்வி வியாபாரத்தை மையமாகக் கொண்டது என்பதும் உண்மையே என்றாலும்கூட அந்த உழைப்பு மரியாதை பெறுகிறது.

தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளி ஆசிரியர் மாதம் சுமார் ரூ. 4,000-க்கு ஆண்டுக்கு 300 நாட்களுக்கும் மேலாக உழைப்பைத் தந்துதான் இந்த 95 சதவீத தேர்ச்சியை சாத்தியமாக்குகிறார்கள் என்பதையும் இந்த உழைப்பு அரசுப் பள்ளிகளில் மெல்ல மெல்லக் குறைந்து வருவதால்தான் தேர்ச்சி விகிதமும் குறைந்து வருகிறது என்பதையும அரசு ஆசிரியர்கள் உணர்ந்து கொண்டால் இப்பிரச்சனைக்கு விடிவு ஏற்படும்.

தனியார் பள்ளி ஆசிரியர்களைவிட பல மடங்கு ஊதியம் பெறும் நாம், கல்வி வியாபாரிகளை ஓரம் கட்ட வேண்டும் என்ற வெறியும், உழைப்பும் அரசுப்பள்ளி ஆசிரியர்களிடமும் அதிகரிக்கும் அளவுக்கு அரசுப் பள்ளிகளில் தேர்ச்சி விகிதமும் உயரும். நூறு சதவீத உழைப்பும் அர்ப்பணிப்பும் நூறு சதவீத தேர்ச்சியை "சத்திய"மாக்கும்.

– நன்றி : தினமணி தலையங்கம் 31.5.2008

அழித்தல் அறமன்று. திருத்தப்படுதலும் வாழ்விக்கப்படுதலுமே அறம். தமிழ் மரபு. "ஆழ்க தீயதெல்லாம்" என்பதுதான். இந்தக் கந்தபுராண மரபு பின்பற்றப்பட்டால் போர் ஒடுங்கும்; புவி வளரும். இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு போர் வராமைக்குக் காரணம் அச்சமேயாம் - அறநெறி சார்ந்த எண்ணத்தினால் அன்று. வீட்டையும் நாட்டையும் அமைதியில் நடத்துக! புவிக்கோளம் அழியாமல் பாதுகாக்கப்பெறும்.

"யாதும் ஊரே! யாவரும் கேளிர்"

என்பதும்,

"காக்கை குருவி எங்கள் சாதி - நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்"

என்பதும் நமது மந்திரங்களாகட்டும்; வாழ்க்கை நெறியாகட்டும்!

- அருள்நெறித்தந்தை

கவலை எனும் அவலம்

(கவிவேந்தர் கா. வேழவேந்தன்)

"கவலை" என்றால் என்னவலை? துயரச் சேற்றுள்
கட்டிநமை அமுத்தும்பாழ் வலையே அன்றோ?
திவலைகளாய் மேகத்துள் ஒளிந்தி ருக்கும்
சிறுஅணுநீர் பெருமழையாய்ப் பொழிதல் போலே
தவறுபெறும் கொடுங்குழவி கவலை! அஃதைத்
தவிர்ப்பதற்கே தவறுகளைத் தவிர்க்க வேண்டும்!
சுவர்ஒன்றே சூறையினைத் தடுக்கும்; உள்ளத்
தூய்மையொன்றே கவலைகட்கு வேலி போடும்!

கடமையெனும் உடைமையினைத் தொலைப்போர் தம்மைக்
கவலைப்பேய், தேடிப்போய்ப் பிடித்தே ஆட்டும்!
நெடுங்கவலைக் கிடங்காக ஆகும் உள்ளம்
நிறைநோய்கள் உறையும்தீக் குளமாய் மாறும்!
மடைகாணாப் பேராசைக் கவலை தானே
மயக்கிப்பின் தடம்மாற்றிச் சிறையுள் தள்ளும்!
விடைசொன்னார் புத்தரன்றே மனத்தில் தோன்றும்
வெறியாசை துயர்க்கவலை குவிக்கும் என்றே!

கன்னத்தில் கைவைத்துக் கவலை தோயக்
கண்ணீரில் நீந்துவதா அறிவு? ஈங்கே
என்னஅதன் பின்னணிதான் என்று பார்த்தே
ஏற்றகமு வாய்தேடல் வேண்டும்! காட்டுள்
தன்னிறைவால் கவலையின்றித் துள்ளும் மான்கள்
தற்கொலைக்கே முயல்வதுண்டா? மனிதன் மட்டும்
இன்னல்தரும் கவலைகட்கே இரையாய்ச் சொந்த
இன்னுயிரைப் பலியிடுதல் முறையா? சொல்வீர்!

தத்தன் ஒரு சிந்தனை

(சைவத்தமிழ்மணி.வித்துவான். **க. கதிரேசன்**)
(குன்றக்குடி ஆதீனப் புலவர்)

"தத்தன்" என்ற பின்ஒட்டுக்கொண்டு, பரமதத்தனைச் சமண சமயத்தவன் என்று கொள்ளுதல் பொருந்தாது, அவன் சைவ சமயத்தனாதல் வேண்டும் என்ற அறிஞர் பெருமக்களின் கருத்தை ஒட்டி எழுந்த மேல் சிந்தனை இது.

தத்துதல் னற தொழிற்பெயரின் பகுதியாகிய "தத்து" எனபது? ஆண்பால் விகுதியாகிய "அன்" பெற்றுத் "தத்தன்" ஆனவழக்கு இது. தத்துதல் – தாவிவந்து சேர்தல். ஒரு குடும்பத்துக்குரிய நிலையில் இருந்து, பிறிதொரு குடும்பத்துக்குரிய நிலையினனாக வந்து அமைந்தவனைத் "தத்தன்" என்பர். சுந்தரமூர்த்தி நாயனார் இவ்வகையில் "மகன்மை" வந்தவர் – தத்தாக வந்தவர்.

பரமதத்தன், தனதத்தன் ஆகியோர்க்கு மட்டுமன்றி, மெய்ப்பொருள் நாயனாரின் ஒப்பற்ற மெய்க்காவலன் தத்தனுக்கும் "தத்தன்" என்ற இக்கருத்து பொருந்தும். இன்றும் ஆண்மகவில்லாதார், பிறிதொரு குடும்பத்து ஆண்மகனைத் "மகன்மை" கொள்ளும் வழக்கமுண்டு. இவர்கள், பெண்மகவைத் தத்தெடுத்தல் – "மகண்மை" கொள்ளுதல் அரிது. ஆதலின் தத்தன் என்ற ஆண்பாலுக்கு இணையான "தத்தை" என்பது வழக்கில் இல்லை; இல்லாள் என்பதற்கு இணையான "இல்லான்" என்ற ஆண்பால் வழக்கு இல்லையாதல் போல,

"வாசவதத்தை" என்பது இந்திரனுக்குரிய கிளிபோன்றவளாகிய இந்திராணியை ஒத்தவள் என்பது பொருந்தும்.

எனவே பரமதத்தன் தத்தாக வந்தவனே தவிர, சமண சமயத்தவனல்லன் – சைவ சமயத்தவனே.

இவை, அறிஞர் பெருமக்களின் மேலாய்வுக்குரியன.

அருளாலய விலைவாசி

(தமிழாகரர். **தெ. முருகசாமி,** புதுச்சேரி)

விலைவாசி ஏற்றம் பற்றி
விறுவிறுப்பாய்ப் பேசிப் பேசி
அலைபாயும் நேரந் தன்னில்
அவரவரும் அடுக்கிக் கூறும்
குலை குலை கார ணத்தால்
குழப்பந்தான் மிஞ்ச, நாட்டில்
நிலையான வாழ்வும் இல்லை
நிம்மதியும் இல்லை அந்தோ!

மந்திரிகள் புள்ளி விவர
மதிப்புரைகள் தந்திட் டாலும்
தந்திரமாய்ப் பதுக்கி விற்கும்
தரங்கெட்ட செயலால் நாட்டில்
அந்தரத்தில் விலைக ளெல்லாம்
அதிரடியாய் உயர்ந்து போச்சு!
எந்திரத்துக் கரும்பாய் மக்கள்
இடுப்பொடிந்து வாழ்கின் றார்கள்!

பணவீக்கம் கட்டுக் குள்ளே
படிப்படியாய் வந்து விட்டால்
பிணநாற்ற வகையால் செய்யும்
பிற்போக்குப் பதுக்கல் எல்லாம்
கணக்காகப் பதுங்கும் என்று
கச்சிதமாய்ச் சொன்னா லும்மே
பணப்புழக்கம், பங்குச் சந்தை
பதுங்கிப்பாய் கின்ற தன்றோ!

உற்பத்திக் குறைந்து விட்ட
உண்மையான கார ணத்தால்
பற்பல இடத்தி ருந்து
பலதையுமே இறக்கி னாலும்
சிற்புத்தி உள்ளோர் செய்யும்
சில்லறைத் தனத்தால் தீய
அற்பத்தனம் பெருகு தம்மா!
அகவிலையின் ஏற்றத் தாலே!

நுகர்வோரின் போக்குத் தானும்
நொடிக்குநொடி மாறுவ தாலே
நகர்ப்புற வாழ்வைப் பார்த்து
நலிவிலா கிராமங் கூட
நுகர்ச்சியில் மயங்கி நாளும்
நுகரும்ருசி பார்ப்ப தாலும்
பகர்கின்ற விலைகள் எல்லாம்
பன்மடங்காம் என்கின் றார்கள்.

வாங்கும்நிலை உயர்ந்து விட்டால்
வளமான பொருள் எல்லாம்
தேங்குநிலை யின்றி நாளும்
தெளிந்தநீ ரோட்டம் போல
ஓங்கிடும் வணிபம், மேலும்
உற்பத்திப் பெருகும் அஃதால்
நீங்கிடும் விலையேற் றந்தான்!
நிம்மதியும் கிட்டும் என்பார்!

அயல்நாட்டில் கச்சா எண்ணெய்
அதிரடியாய் உயர்வ தாலும்
முயல்வேக ஆன்லைன் வர்த்தக
முறைகேடு வளர்வ தாலும்
1. உயலாகும் அரசிய லாலே
உலகமய மாக்க லாலும்
மயலாகும் விலைவா சித்தான்
மக்களையே வாட்டு தென்பார்!

1. அசைந்தாடும்.

பொருள்விலை ஏற்றத் திற்காம்
பொருளினைக் கூறி னாலும்
இருள்நீங்கி விடியல் காணும்
இயற்கைபோல் விலையேற் றம்மாம்
மருள்நீங்கி மக்க ளெல்லாம்
மகிழ்வுடன் வாழு தற்குத்
தெருள்வழித் தெரிய வில்லை
திகைக்கின்றார் அரசிய லாரும்!

பாராளு மன்றம் மற்றும்
பற்பலமா நிலங்கள் எல்லாம்
தாராள வரிவி லக்கின்
தகவலை அறிவித் தாலும்
ஏராள மான பேர்கள்
எடுத்தவிலைக் குறைப்பைச் செய்யத்
தாராளம் காட்டுவ தில்லை
தயங்குகிறார்! ஏனோ? அந்தோ!

என்றுகண் ணயர்ந்த வேளை
எதிர்வந்த ஒருவர், "பாரதி
என்றோதான் சொன்ன அந்த
'எல்லோரும் ஓர்விலை' என்ற
நின்றசொல் பற்றி யாரும்
நினைக்கவே இல்லை போலும்?"
என்றவர் தம்மைக் கேட்டேன்
"எல்லோரும் ஓர்விலை" பற்றி!

"எல்லோரும் சரிநிகர் சமமாய்
எப்போதும் வாழ்தல் அதுதான்,
கல்லாரும் கற்றார் தாமும்
கலப்பது மட்டு மின்றி
இல்லாரும் இருப்பார் தாமும்
இரண்டறக் கலப்ப தான
சொல்லாரும் பொருட்கு மேலாம்
சொலவல்ல ஒன்றுண் டென்றார்!

வெள்ளையர் கறுப்பர் என்ற
வேற்றுமைபோல் இந்த நாட்டில்
கொள்ளைநோய் அம்மை போலக்
கோரமாய் தொத்தி யுள்ள
[1] சள்ளையாம் தீண்டா மைக்கே
சாவுமணி யடிப்ப தோடம்
முள்ளைத்தான் எடுத்து விட்டால்
மூண்டவிலை இறங்கிப் போகும்!

விலைவாசி ஏற்ற மெல்லாம்
வியாபாரப் பெருக்கத் தாலே
நிலைகுலைந்து போகும், அஃது
நிலையாக இருப்ப தில்லா
அலைபோல மாறி மாறி
அசைந்தாடி மறையும், ஆனால்
விலையிலா மாந்தர் சிலரை
விலக்கிடலே [2] வாசி என்றார்??

வாசிதீரக் காசு கேட்டதால்
வாசிஎன்றால் குற்றம் என்ற
[3] வாசியான பொருளால் நானும்
வாசிபற்றிச் சொன்னோர் தம்மின்
[4] வாசிப்பைச் சொன்ன வாறே
வாய்,கண் திறந்தேன்! அந்த
[5] வாசியிலா அருளா லயத்தின்
வாசலைப் பார்த்தேன் நன்றே!

1. தொல்லையாம். 2. குற்றம் 3. பொருத்தமான 4. சொன்னபொருளை
5. குற்றமான.

வரலாறு திரும்புகிறது என்பது அறிவார்ந்த நிலையன்று. வரலாற்றிலிருந்து படிப்பினைகளைக் கற்றுக்கொண்டு வரலாற்றைப் புதுப்பிப்பதே வாழும் மாந்தர் கடமை. வரலாறு திரும்பத் திரும்ப வருதல் சிந்தனையும் செயலுமற்ற மாந்தர் வாழும் உலகத்தில்தான் நிகழும்.

- அருள்நெறித்தந்தை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அருட்டிரு பாம்பன் சுவாமிகள் அருளிய திருக்குன்றக்குடிப்பதிகம் உரை

(சைவத்தமிழ்மணி.வித்துவான். க. கதிரேசன்)
(குன்றக்குடி ஆதீனப் புலவர்)

சுக்கில ஆக்கையின் உள்ளே, சூழும்ம லஇருள் உள்ளே
பக்குவம் இன்றிஎந் நாளும் பந்தப்பட் டேஉள என்னைச்
சிக்கென வேவந்து பற்றித் திருந்திய உன்பதம் ஈதி
குக்குட கேதனக் கோவே குன்றக்குடியுறை தேவே.

கூட்டுமுறை

குக்குட....தேவே; சுக்கில.... என்னை, வந்து சிக்கெனவேபோற்றி... ஈதி என்று கூட்டுக.

குறிப்புரை

குக்குடம் = சேவல். கேதனம் = கொடி சுக்கிலம், இந்திரியம் ஆக்கை = உடம்பு. மலம் = மும்மலம். பந்தப்பட்டே = கட்டுண்டே. சிக்கென = மிக உறுதியாக. திருந்திய = எந்நாளும் திருத்தமாகவே உள்ள. ஈதி = அருள்க.

பொழிப்புரை

சேவற்கொடியுயர்த்த கோவே; குன்றக்குடியுறை தேவே; இந்திரியத்தால் ஆன இவ்வுடம்பின் உள்ளே அடைபட்டு, என்னைச் சூழ்ந்துள்ள ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மல இருளில், பக்குவப்படாமல் எந்நாளும் மலத்திற்கட்டுண்டு கிடக்கும் என்பால், நீயே வந்து என்னை மிகஉறுதியாகப் பற்றிக்கொண்டு, எந்நாளும் திருத்தமாகவே விளங்கும் உன் திருவடிகளை எனக்கு அருள்க.

விளக்கம்

ஆக்கை = கட்டு. ஆக்கை என்பது இங்கு எழுவகைத் தாதுக்களால் ஆன உடம்பு குறித்தது. எழுவகைத் தாதுக்களாவன; இரதம் (உமிழ்நீர், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல் என்பன.

உயிரிடத்ததான மும்மலமும் அதனைச் சூழ்ந்து நின்று அறியாமை இருளில் அகப்படுத்துவதால் சூழும் மலஇருள் என்றார், மும்மலத்துள் ஆணவத்தின் இயல்பை

"ஒருபொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்;
இருபொருளும் காட்டாது இது"

– திருவருட்பயன்-3

இது = ஆணவம்.

(இருள், எந்த ஒரு பொருளையும் காட்டாதாயினும் தன் இருப்பையாவது காட்டும். ஆணவம் இவ்விரண்டையும் – தன்னையும் பொருள்களையும் கட்டாது)

"சிக்கெனவே வந்து பற்றுதல்" பெருமான் பொறுப்பு என்பதை, "தானே வந்து எம்மைத் தலையளித்துஆட்கொண்டு அருளும்" என்று மணிவாசகமும் கூறுதல் எண்ணத்தக்கது.

தானே வருதல் பெருமான் செயலாகக் கூறினும் "சிக்கெனப் பிடித்தல்" தன் செயலாக " சிக்கெனப் பிடித்தேன் எங்கு எழுந்தருளுவது இனியே" என்பார் வாதவூரடிகள். பாம்பன் அடிகள், வருதலும் சிக்கெனவே பற்றுதலும் தன்செயலல்ல பெருமான் செயலே என்கின்றார்.

"ஈதா கொடுஎனும் மூன்றும் முறையே
இழிந்தோன் ஒப்போன் உயர்ந்தோன் இரப்புரை"

என்ற இலக்கண நெறி பற்றி, "ஈதி" என்றதனால் பெருமானின் தன்னேரில்லாத் தகுதியும், தன்தாழ்நிலையும் குறித்தார்.

ஆணவத்தின் குறியீடு சூரபதுமன். அவனைத் தடிந்து மயிலாகவும் சேவலாகவும் ஆட்கொண்ட பெருமை போல, தன்னையும் தடிந்து ஆட்கொள்ளவேண்டும் என்ற குறிப்புடையது. இங்குச் சேவல் குறித்து, அடுத்த பாடலில் மயிலும் கூறுகிறார்.

இலக்கணக்குறிப்பு

ஆக்கை – தொழிலாகுபெயர். மலஇருள் – உருவகம். பந்தப்பட்டே – தேற்றேகாரம். ஈதி – முன்னிலை ஒருமைவினைமுற்று. குக்குடகேதனம் – இரு பெயரொட்டுப் பண்புத்தொகை.

(தொடரும்)

பெரியபுராணம் புலப்படுத்தும் வாழ்க்கை நெறி

6. அரசரைப் போற்றிய அடிகள்

(புலவர். ச.மு. விமலானந்தம்)

சோழநாட்டில் திங்களூரில் அந்தணர் மரபில் அப்பூதி அடிகள் தோன்றினார். அவர் திருநாவுக்கரசு நாயனாரைக் காணாமலே அவர் பெருமையைக் கேட்டறிந்து அவரிடம் பேரன்பு பூண்டார். ஆதலால் அவர் தம் மைந்தர், பசுக்கள், மடம், தண்ணீர்பந்தல் முதலியவற்றுக்குத் "திருநாவுக்கரசு" என்று பெயரிட்டார்.

ஒரு நாள் திருநாவுக்கரசர் திங்களூர் வழியாக வந்தார். அங்கிருந்த தண்ணீர்ப் பந்தலுக்குத் தம் பெயரை வைத்திருப்பதைக் கண்டார். அவர் அருகிலிருந்தவர்களிடம் "இந்தத் தண்ணீர்ப்பந்தலுக்குத் திருநாவுக்கரசு எனப் பெய்ரிட்டவர் யார்?" என வினவினார். அவர்கள் "அப்பூதியடிகள்" என்றனர். நாவுக்கரசர் "அவர் இப்போது எங்கே இருக்கிறார்?" என்று கேட்டார். "அவர் இப்போதுதான் வீட்டிற்குச் சென்றார்" என்று கூறி அவர் வீட்டுக்குச் செல்லும் வழியையும் காட்டினார்.

திருநாவுக்கரசர் அப்பூதியடிகள் வீட்டிற்குச் சென்றார். அப்பூதியடிகள் நாவுக்கரசரை ஒரு சிவனடியார் எனக் கருதி வணங்கி வரவேற்றார். நாவுக்கரசர், "நீங்கள் வைத்துள்ள தண்ணீர்ப் பந்தலுக்கு உங்கள் பெயரை வைக்காமல் வேறொரு பெயர் வைக்கக் காரணம் யாது?" எனக் கேட்டார். அதைக் கேட்ட அப்பூதியடிகள் சினங்கொண்டு, "ஈசமணரின் சூழ்ச்சியால் அரசன் செய்த தீமைகளை வென்றவரின் திருப்பெயரோ வேறொருவர் பெயர்" வெம்மை மொழி கூறிய நீர் யார்?" எனக் கேட்டார். "சமணப்படுகுழியிலிருந்து மீளச் சூலை நோய் தந்து இறைவர் ஆட்கொண்ட, தெளிந்த உணர்வில்லாத சிறியேன் யான்" என்றார் நாவுக்கரசர்.

அதைக்கேட்டவுடனேயே அப்பூதியார் கைகள் தலை மேல் குவியக் கண்கள் நீர் பொழிய, உடல் புளகாங்கிதம் அடைந்து நாவரசரின் திருவடிகளில் விழுந்து வணங்கினார். நாவுக்கரசரும் அவரை வணங்கித் தழுவிக்கொண்டார். இதுதான் சிறந்த பண்பு; பெரியோர் தம்மை வணங்கியவரையும் தமக்குச் சமமாக கருதி வணங்குவர்.

கிராமப்பெண்களுக்குச் சேவை செய்த சின்னப்பிள்ளை என்ற தமிழகப் பெண்ணுக்கு முன்னாள் பிரதமர் விருது வழங்கினார்; அந்த அம்மையார் அவரை வணங்கி அந்த விருதைப் பெற்றார். அதிகப் படிப்போ,

செல்வமோ இல்லாத அந்த அம்மையாரைப் பிரதமரும் வணங்கினார். இதுதான் உயர்ந்த பண்பு. நாமும் இந்த உயர்ந்த பண்பைப் பெற்று உயர்வோமாக!

அப்பூதியார் நாவுக்கரசரை உணவு உண்ண வேண்டினார். அவரும் உண்ண இசைந்தார். அப்பூதியின் துணைவியார் அறுசுவை உணவைச் சமைத்தார். பிறகு தம் மகனை – மூத்த திருநாவுக்கரசை – அழைத்து "வாழைக்குருத்தை அரிந்துவா" என்றனர். அவன் "நல்ல தாய் தந்தை ஏவ நான் இது செய்யப்பெற்றேன்" என்று கூறிக்கொண்டே வாழைக்குருத்தை அரிந்துவர விரைவாகத் தோட்டத்துக்குச் சென்றான்.

மூத்த திருநாவுக்கரசரைப் போல இன்றைய இளைஞர்கள் தம் பெற்றோரை "நல்ல தாய் தந்தையாக" மதிக்க வேண்டும். அவனைப் போல் பெற்றோர் இட்ட கட்டளையை விரைவாகச் செய்ய முற்படவேண்டும். "தாய் சொல்லைத் தட்டாதே", "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்ற பொன்மொழிகளைப் போற்றி, தந்தையையும், தாயையும் முன்னறி தெய்வமாகக் கொள்ளவேண்டும். மூத்த திருநாவுக்கரசு வாழைக்குருத்தை அரிந்தபோது அவன் கையில் பாம்பு தீண்டியது. நஞ்சு ஏறியது. அவன் அதனைப் பொறுத்துக்கொண்டு விரைவாகச் சென்று பெற்றோரிடம் வாழைக்குருத்தைத் தந்து தரையில் விழுந்திறந்தான். அவன் நஞ்சினால் இறந்தான் என்பதைப் பெற்றோர் அறிந்தனர். இறந்த மகனைப் பாயுள் மறைத்தனர். நாவுக்கரசரை உணவுஉண்ண அழைத்தனர். நாவுக்கரசர்பால் கொண்ட பக்தி. பிள்ளைப்பாசத்தை – சோகத்தை – வென்றது.

நாவுக்கரசர் மூத்த மகனை அழைக்கச் சொன்னார். உண்மையை உரைக்க முடியாது; பொய் சொல்லக்கூடாது. இக்கட்டான இந்நிலையில் அவர்கள் "இப்போது இங்கவன் உதவான்" என்று சாமர்த்தியமாகக் கூறினர். ஆனால் நாவுக்கரசர் உண்மையை உரைக்கச் சொன்னதால் உரைத்தனர்.

நாவுக்கரசர், இறந்த மகனின் உடலைக் கோயிலுக்குள் கொணரச் செய்து, "ஒன்று கொலாம்" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். மூத்த திருநாவுக்கரசு நஞ்சு நீங்கி உறக்கத்தினின்று எழுபவனைப் போல எழுந்தான். நாவரசர் அவனுக்குத் திருநீறு அளித்தார். அவர் உணவுண்ண காலம் தாழ்ந்ததே எனப் பெற்றோர் வருந்தினர். பிறகு அனைவரும் உணவுண்டனர். நாவுக்கரசர் பாடிய பதிகத்தில் அப்பூதியாரின் அருந்தொண்டைச் சிறப்பித்தார். அப்பூதியார் அருட்செல்வம் பெற்றுப் பிறவாப் பேரின்ப நிலையடைந்தார். அவரைப் போல நாமும் இறையருளைப் பெற்றுய்ய முயல்வோமாக.

(தொடரும்)

குன்றக்குடியில் விசாகவிழா

குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமான் விசாகப் பெருவிழா 19.5.08 திங்கட்கிழமையன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை 7-15 மணியளவில் அருள்தரு சண்முகநாதப் பெருமான் வெட்டிவேர்த் திருக்கோலம் பூண்டு திருக்கோயிலிலிருந்து ஆதீனத் திருமடத்திற்கு நாதசுர இன்னிசையுடன் எழுந்தருளி வந்தார். திருமடத்திலிருந்து பெருமானை வரவேற்க அன்பர்கள் சீர்வரிசைகளுடன் நாதசுர இசை முழங்கச்சென்று அழைத்து வந்தனர். திருமடத்தின் முகப்பில் திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் முன் சென்று வரவேற்றுப் பொன்னாடை சாத்தி தீபாராதனை செய்து வரவேற்றார்கள். பின்னர் அருள்தரு சண்முகநாதப் பெருமான், அருள்தரு காளத்திநாதர் சந்நிதிக்குச் சென்று அங்கிருந்து கொலுமண்டபத்திற்கு எழுந்தருளினார். வேதம் முழங்க, திருமுறைகள் ஓத, நாதசுர இன்னிசை முழங்க பெருமான் கொலுமண்டபத்திலுள்ள நீராழி மண்டபத்தில் எழுந்தருளினார். அதன் பின் கவிஞர்கள் அறுவர் பெருமானுக்கு வரவேற்புத் தமிழ்மாலை சூட்டினர். பின் பெருமானுக்கு திருமுழுக்காட்டும், பச்சைச் சாத்துப்படியும் சிறப்பு வழிபாடும் நிகழ்ந்தன.

மாலை 6.30 மணியளவில் குன்றக்குடி ஆதீன இசை இளவரசு பத்மஸ்ரீ டாக்டர் சீகாழி கோ. சிவசிதம்பரம் குழுவினரின் இசையரங்கம் நிகழ்ந்தது. இரவு 9.00 மணி அளவில் திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் சீகாழி கோ. சிவசிதம்பரம் அவர்களுக்கு "இசைவேந்தர்" என்னும் பட்டம் வழங்கிப் பொற்பதக்கமும், பொன்னாடையும் அணிவித்து ஆசியுரை வழங்கினார்கள். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் பி. ராமசாமி அவர்களும், திருக்குறள் செம்மல் திரு. ந. மணிமொழியன் அவர்களும் பாராட்டுரை வழங்கினர். பின்னர் பாராட்டுப்பெற்ற பத்மஸ்ரீ டாக்டர்.இசைவேந்தர். சீர்காழி கோ. சிவசிதம்பரம் அவர்கள் ஏற்புரை வழங்கினார். இரவு 10.00 மணியளவில் வெள்ளிரதத்தில் அருள்தரு சண்முகநாதப் பெருமான் திருவீதி உலாநிகழ விழா இனிதே நிறைவெய்தியது.

குன்றக்குடியில் 14.6.2008இல் நடைபெற்ற உலகத் திருக்குள் பேரவை பொதுக்குழுக் கூட்டம்

குன்றக்குடி ஆதீனக் கொலுமண்டபத்தில் உலகத் திருக்குறள் பேரவைப் பொதுக்குழு கூட்டம் 14.6.08 காலை 10.30 மணி அளவில் தொடங்கி நடைபெற்றது. கூட்டம் தொடங்குவதற்கு முன் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபத்திற்குச் சென்று தியான மண்டபத்தில் அமைந்துள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து திருக்குறளில் உள்ள கடவுள் வாழ்த்து ஓதி மலர்சொரிந்து வணங்கினர். அதன்பின் உலகத் திருக்குறள் பேரவைத் தலைவர் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தலைமையில் பொதுச்செயலாளர்கள். திரு. ந. மணிமொழியன், திருக்குறள் நா. சண்முகனார், திரு. தி.சு. மலையப்பன் ஆகியோர் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு 200க்கும் மேற்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் வருகைதந்து இருந்தனர். பொதுக்குழுவில் ஒவ்வொரு மாவட்டத்தின் பிரதிநிதியும் தத்தம் ஆலோசனையினை எடுத்துரைத்தனர். பல தீர்மானங்கள் நிறைவேறின. தலைவர் தவத்திரு பொன்னம்பல அடிகளார் நிறைவுரையாற்றினார். திரு. தி.சு. மலையப்பன் நன்றிகூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

இரங்கல் தீர்மானம் :

1. உலகத் திருக்குறள் பேரவையின் பொருளாளரும் வள்ளலுமாய்த் திகழ்ந்த திருச்சிராப்பள்ளி திரு. அரு. அண்ணாமலை செட்டியார் அவர்கள்.
2. உலகத் திருக்குறள் பேரவைப் பணிகளில் நெஞ்சார்ந்த ஈடுபாட்டுடன் விளங்கிய திருச்சிராப்பள்ளி திரு விஷ்ணுதாஸ் அவர்கள்
3. உலகத் திருக்குறள் பேரவையின் சிறந்த சிந்தனையாளரும் திருக்குறள் நெறியில் வாழ்ந்தவரும் சிறந்த கல்வியாளருமாகிய சிவகாசி திரு. எம். பால்ராஜ் அவர்கள்.
4. உலகத் திருக்குறள் பேரவையின் துணைத் தலைவராக விளங்கியவரும் திருக்குறட் சிந்தனையாளரும், திருக்குறள் தொண்டருமான ஈரோடு திரு. தி.அ. சண்முகசுந்தரம் அவர்கள்.

5. சிறந்த தமிழ்ப் புலவரும் தஞ்சை மாநகரில் திருக்குறள் பேரவை அமைத்தும் பல்லாண்டுகளாகப் பணி செய்தவருமான புலவர் திரு. மொ. பழனி மாணிக்கம் அவர்கள்.
6. தெ.ஆ. மாவட்டத் திருக்குறள் பேரவைத் துணைச் செயலாளரும் சிறந்த திருக்குறள் ஆர்வலருமான வெள்ளிமேடுபேட்டை திரு. ஆ. செயராமன் அவர்கள்.
7. உலகத் திருக்குறள் பேரவையின் சிறப்பு உறுப்பினரும் சமூகத் தொண்டருமான மதுரை திரு. அ. கருணைதாசன் அவர்கள்.
8. உலகத் திருக்குறள் பேரவை அறிஞர் குழு உறுப்பினராக விளங்கிய மதுரை பேராசிரியர் திரு. சு. குழந்தைநாதன் அவர்கள்.
9. உலகத் திருக்குறள் பேரவை உறுப்பினரும், கோயில்பட்டி திருவள்ளுவர் மன்ற தலைவரும் தமிழறிஞருமாகிய முனைவர். அ. சங்கரவள்ளி நாயகம் அவர்கள்.
10. முன்னாள் தமிழக சட்டமன்றச் சபாநாயகரும், அமைச்சரும், திருக்குறள் ஆர்வலருமாகிய திரு. க. இராசாராம் அவர்கள்.

ஆகியோரின் மறைவு திருக்குறள் பேரவைக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். இப்பெருமக்களை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் நண்பர்களுக்கும் உலகத் திருக்குறள் பேரவை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களின் நல்லுயிர்கள் இறைவன் திருவடி நிழலில் இன்ப அமைதிபெற இறைஞ்சுகிறது.

தீர்மானங்கள் :

அடியிற்காணும் உறுப்பினர்களைக் கொண்ட அறிஞர்குழு உலகத் திருக்குறள் பேரவைக்கு ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றது.

1. முனைவர். தமிழண்ணல்
2. முனைவர் க.ப. அறவாணன்
3. புலவர். இரா. இளங்குமரனார்
4. முனைவர். ச.வே. சுப்பிரமணியம்
5. முனைவர்.கவிஞர். சிற்பி பாலசுப்பிரமணியம்
6. பெரும்புலவர். ப. அரங்கசாமி
7. முனைவர். எழில் முதல்வன்
8. முனைவர். அ. அறிவுநம்பி ள்
9. முனைவர். சோ. சத்தியசீலன்
10. முனைவர். தாயம்மாள் அறவாணன்

11. முனைவர். பழ. முத்தப்பன்
12. பேராசிரியர். கா. அரங்கசாமி
13. முனைவர். சரளா ராஜகோபாலன்
14. முனைவர். சாமி. தியாகராசன்
15. முனைவர். மலையமான்
16. தமிழாகரர். தெ. முருகசாமி
17. பேராசிரியை. மு. குருவம்மாள்
18. பேராசிரியர். யாழ். சந்திரா
19. பேராசிரியர். சேதுபதி
20. பேராசிரியர். பா. சுந்தர்
21. புலவர். க. சண்முகம்

உ. அடியிற்காணும் வண்ணம் உலகத்திருக்குறள் பேரவைக்குப் புதிய செயற்குழு ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பெற்றது.

புரவலர்கள்:

1. தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
2. தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள்

தலைவர் :

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

துணைத் தலைவர்கள் :

1. மாண்புமிகு சி.நா.மீ. உபயதுல்லா - தஞ்சாவூர்.
2. திரு. சு. முருகானந்தம் - திருச்சிராப்பள்ளி
3. திரு. புலவர். அ.கி. செல்வகணபதி
4. திரு. வீ.செ. கந்தசாமி

பொதுச் செயலாளர்கள் :

1. திரு. ந. மணிமொழியன் - வெளியீட்டுத்துறை
2. திரு. நா. சண்முகம் - அமைப்பு, நிர்வாகம்
3. திரு. தி.சு. மலையப்பன் - கொள்கைப்பரப்பு

பொருளாளர் :

திரு. சீனு. சின்னப்பா - புதுக்கோட்டை.

செயற்குழு உறுப்பினர்கள் :

1. திரு. ம. முத்தரசு - இராசபாளையம்
2. திரு. முனைவர். சரளா இராசபோபாலன் - சென்னை.
3. திரு. முனைவர். கா. அரங்கசாமி - கோபி.
4. புலவர். க. சண்முகம் - மதுரை
5. புலவர். நாவை. சிவம் - மணப்பாறை

அச்சுப்பதிப்பு விடுபட்டுள்ளது.

தீர்மானம் 2:

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்", என்று உரக்க முழங்கியது திருக்குறள் நெறி!

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் கோத்திரம் குலமும் கொண்டு என் செய்வீர்...." என்று எழுந்து கிளர்ந்து கேட்டது திருமுறை நெறி!

"ஒன்றே குலம்! ஒருவனே தேவன்" என்று முழங்கியது திருமந்திர நெறி!

"மாதர்ப்பிறைக் கண்ணியானை
மலையான் மகளொடும்பாடி
போதோடு நீர் சுமந்து ஏத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்"

என்பது இறைவனை சாதிவேறுபாடு இன்றி அனைவரும் வழிபட்ட பழந்தமிழ் சமய நெறி

சீலமும் பக்தியும் உடையோர் இறைவனைப் பூசிப்பதற்கு சாதி வழிப்பட்ட பிறப்பு, தடையாய் இருந்த நிலையை மாற்றி சாதிவேறுபாடு இன்றி அனைவரும் அர்ச்சகர் ஆவதற்கு உரிய சட்டத்தினைக் கொண்டுவந்து அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளை தமிழகத் திருக்கோயில்களில் சிறப்பாக நடைமுறைப்படுத்தி வரும் தமிழக அரசுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.ஆர். பெரியகருப்பன் அவர்களுக்கும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் கு. பிச்சாண்டி அவர்களுக்கும் மற்றும் செயலர் சந்தானம் அவர்களுக்கும் பொதுக்குழு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

முன்மொழிந்தவர்: தி.சு. மலையப்பன்
வழிமொழிந்தவர் : கஸ்தூரிநாதன்

தீர்மானம் 3:

தில்லை அம்பலத்தில் திருமுறைகள் ஓதுவதற்கு இருந்த தடையை நீக்கி, திருச்சிற்றம்பல மேடையில் ஆறுமுகசாமி சிவனடியார் பாடுவதற்கு முழு ஒத்துழைப்பும் நல்கி, அவருக்கு வாழ்நாள் முழுவதும் வறுமையின் பிடியில் இருந்து விடுபட, மாதம் தோறும் ரூ. 3000/- வாழ்வூதியம் வழங்கி, திருமுறைகளுக்கும், திருமுறை பாடுவோருக்கும் இருந்த இடர்ப்பாட்டை நீக்கிய தமிழக அரசின் முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர்

அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு கே.ஆர். பெரியகருப்பன் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திருமிகு. கு. பிச்சாண்டி அவர்களுக்கும், செயலர் திரு. சந்தானம் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் இப்பொழுது தெரிவித்துக் கொள்கிறது.

முன்மொழிந்தவர் : யாழ். சந்திரா
வழிமொழிந்தவர் : சேதுபதி.

தீர்மானம் 4:

தமிழைச் செம்மொழி ஆக்கியதோடு "செம்மொழித் தமிழ் ஆய்வு மத்திய நிறுவனம்" மைசூரில் இயங்கிக் கொண்டிருப்பதை தமிழகத்திற்குக் கொண்டு வந்து தமிழுக்கு மேலும் சிறப்புச் சேர்த்த முத்தமிழறிஞர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் இப்பொதுக்குழு தெரிவித்துக்கொள்கிறது.

முன்மொழிந்தவர் : பேராசிரியை குருவம்மாள்
வழிமொழிந்தவர் : மு. பழனியப்பன்.

தீர்மானம் 5 :

பல ஆண்டுகளாகப் பெங்களூரில் திறக்கப்படாமல் இருக்கும் திருவள்ளுவர் சிலையைத் திறப்பதற்கு உரிய வழிவகைகளைக் காணுமாறு மத்திய மாநில அரசுகளை உலகத் திருக்குறள் பேரவைப் பொதுக்குழு கேட்டுக்கொள்கின்றது.

முன்மொழிந்தவர்: குமரி பத்மநாபன்
வழிமொழிந்தவர் : நாவை சிவம்.

தீர்மானம் 6:

இந்தியாவின் தலைநகரம் புதுடெல்லியில் பாதுகாப்பற்ற கழிப்பறைகள் சூழ இருந்த திருவள்ளுவர் சிலையை புதுடெல்லி தமிழ்ச் சங்கத்தில் நிறுவ வழிவகை கண்ட புதுடெல்லி தமிழ்ச் சங்கதிற்கும், டெல்லி மாநில முதல்வர் ஷீலா தீட்சித் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை உலகத் திருக்குறள் பேரவைப் பொதுக்குழு தெரிவித்துக்கொள்கிறது.

முன்மொழிந்தவர் : இராசபாளையம் முத்தரசு
வழிமொழிந்த வர் : தஞ்சை. மாறவர்மன்.


(தொடர்ச்சி அடுத்த இதழில்)

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

- ஆசிரியர்



அருள்நெறி முழக்கம்

ஆசிரியர் :
தவத்திரு குன்றக்குடி அடிகளார்

விலை : 40/-
பக்கங்கள் : 96பக்கங்கள்

அருள்நெறி பதிப்பகம்
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்



சமய வாழ்வு

விலை : ரூ. 40/-
பக்கங்கள் : 176 பக்கங்கள்



காற்றில் வந்த கருத்துமழை

விலை : 70/-
பக்கங்கள் : 176 பக்கங்கள்

ஆசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

திருமாறன் பதிப்பகம்
7/8 பீட்டர்ஸ் குடியிருப்பு
இராயப்பேட்டை
சென்னை - 600 014

MAKKAL CHINTHANAI - June 2008 Price Rs. 5.00
Date of Publication 20-06-2008
Register of News Paper for India No. 85913/81 Register No. KKD/04/2006-2008

பெறுநர்

திரு ஆதீனகர்த்தர் அவர்கள் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
காரைக்குடி (வழி)

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166